ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

**லௌகிகர்:—** தார்மிகரே! தர்மத்தைப் பேசுகிறவர் ஸங்கியை அதிகமா? அனுஷ்டிப்பவர் ஸங்கியை அதிகமா? எப்படியிருந்தாலென்ன என்று சொல்லக்கூடாது. ஏனெனில் நான் பார்த்தமட்டில் பெரிய பேர் பெற்றவரும் பேச்சோடு நிற்பதாக காண்கிறதேயன்றி அனுஷ்டிப்பவரை காண்பது அரிதாய் விட்டது. தர்மத்தைக் கெடுக்கத்தலையெடுத்தவர்கள் தங்கள் கோரிக்கையை நடத்தியே காட்டிவிடுகிறார்கள். உங்களுடைய வெரும் பேச்சால் என்ன காரியமாகும்.

**தார்மிகர்—**தர்மம் பேச்சிலிருப்பதாகவாவது தாங்களே அங்கீகரித்தபடியால் மனதிலும் தர்மவாஸனை ஏறியிருப்பதில் தடையில்லை. மனதிலில்லாததை பேச்சில் கொண்டுவர முடியாதல்லவா. மனதிலும் வாக்கிலும் நிறைந்துள்ள தர்மம் காலதேசவசத்தால் சிலரிடம் சாரீரமாக அனுஷ்டானத்தில் காணப்படாவிடினும் சரீரத்தாலும்அனுஷ்டிக்கும் பெருமைவாய்ந்த புண்ணியபுருஷர்களை பார்க்க தாங்கள் பாக்யம் பெறவில்லைபோலும். அதனால் இவ்விதம் கேட்கிறீர். இனியாவது அம்மஹான்களைக் கண்டு எவர் ஸங்கியை அதிகமென்பதை உணர்வீராக.

** ** ** ** ** ** ** **

**குரு:**—சமதமாதி குணங்களை யடையவேண்டுமென்று உபதேசித்தார்.

**சிஷ்யன்:—** அவைகளின் ஸ்வரூபம் யாது? அடையும் உபாயம் எது என்று வினவ அனேகப்ரகாரமாக போதிக்கையிலும் திருப்பித் திருப்பி கேட்டான். கடைசியாக குரு கடுஞ்சினங்கொள்வதைக்கண்டு சமதமாதிகள் தெரிந்துவிட்டன தெரிந்துவிட்டன என்றான். குரு தனக்கு சமதமாதிகளில்லையே என்று ஏக்கமடைந்தார். ஆகவே இவர்களெல்லாம் குருவாகமாட்டார்கள்.

**நவீனன்:—** பூர்வீகர்கள் பொதுநலத்திற்கு பாடுபட்டார்களா?

** ** ** ** ** ** ** **

**ப்ராசீனன்:—** அவர்கள்தான் பொதுநலத்திற்கு பாடுபட்டவர்கள் ஏனெனில் பொதுவென்பதற்கும், நலமென்பதற்கும் பொருள் அவர்களுக்குத்தான் தெரியும். அதற்காகப் பாடுபடும் வழியும் அதைக்குறிப்பட்ட காலத்தில் இஷ்டப்படி சாதிக்கும் திறமையும் அவர்களுக்குத் தான் உண்டு. சரித்திர ஆராய்ச்சி செய்தவர்களுக்கு இதுவெளிப்படை. ஆகையால் முன்னோர்களான தார்மிகர்களின் தர்மோபதேசத்திற்குத் தக்கபடி நடந்து யாவரும் சிரேயஸ்ஸை அடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

ப்ரமோத-௵ தை-௴ ௩௦௨


## ஆத்துமகுணங்கள்

### (2) பொறுமை.

ஆத்மகுணங்களுள் இரண்டாவதாகப் படிக்கப்பட்டது பொறுமை. பிராணிகளுக்குப் பிராணவியோகம் நேரும்போது தன் சக்திக்கேற்றவாறு எப்படியாவது ரக்ஷிக்க முயலவேண்டும். பிராணன் போகும்படியாயில்லாமல் ஸ்வல்பகஷ்டங்கள் புண்ணியவான்களுக்கு நேருமானாலும் ரக்ஷிக்கவேண்டியதுதான். பாபிகளுக்கு பாபகார்யநிமித்தமான கஷ்டங்கள் நேரிட்டால் ரக்ஷிக்க முயல்வது ஸரியல்ல. சக்தியிருந்தால் சிக்ஷிக்கவேண்டியது. அங்ஙனமே மஹாபாரதம் துரோணபர்வத்தில்

अपिचायं पुरागीतः श्लोको वाल्मीकिना भुवि ।

सर्वकालं मनुष्येण व्यवसायवता सदा ।

पीडाकरममित्राणां यत्स्यात् कर्तव्यमेव तत् ॥

அத். 143. சு. 67.

"அன்றியும் முன்னொரு காலத்தில் வால்மீகிபகவான் இப்புவியில் ஒரு சுலோகம் சொல்லியிருக்கிறார். அதாவது எப்பொழுதும் சாஸ்திரத்திலும் ஸதாசாரத்திலும் உருதியுள்ள மனிதன் தர்மவிரோதிகள்விஷயத்தில் பீடாகாமான கார்யமெதுவோ, அதைத்தான் செய்யவேண்டும்" என்று கூறியிருப்பதால் தர்மவிபரீதமாய் நடத்துபவர்களைப் பீடித்தாவது நல்ல புத்தியுண்டாகும்படி உபதேசிக்கவேண்டும். அதற்குச் சக்தியில்லாவிடில் உபேக்ஷை செய்துவிடவேண்டியது. இதிலிருந்து அந்த துஷ்டர்கள் அடங்காமல் அனிஷ்டத்தையே செய்வார்களானால் அப்பொழுது புண்ணியவான் பொறுமையடையவேண்டும். அதன் சொரூபம் பிருஹஸ்பதிபகவானால்

बाह्ये चाभ्यन्तरे चैव दुःखउत्पादिते परैः ।
न प्रकुप्यति नो हन्ति सा क्षमा परिकीर्तिता ॥

"பிறர்கள் உள்ளேயோ வெளியிலேயோ துக்கத்தையுண்டுபண்ணும்பொழுது கோபத்தையடையாமலும், ஹிம்ஸிக்க நினைக்காமலுமிருப்பது பொறுமையெனப்படும்" என்று கூறப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே சிலர் ஸாதுக்களுக்கு துக்கத்தையுண்டு பண்ணுவதிலேயே பிரியப்படுவார்கள். ரஜோகுண தமோகுண முள்ளவர்களுக்கு ஸாத்விககுணமுள்ளவர்களின் வார்த்தையிலும் நடத்தையிலும் பிரீதியில்லையென்பதுமாத்திரமில்லை, த்வேஷமு முண்டு. அதனால் அவர்களைக் கஷ்டப்படும்படியும் செய்வார்கள். வெளிப்படையாகவும், ரஹஸ்யமாகவும் ஸாதுக்களுக்குக் கெடுதலைச்செய்ய முன்வருவார்கள். அந்த ஸமயத்தில் ஸாதுக்கள் நல்ல வார்த்தை சொல்லிப்பார்த்தும் பலிக்காவிடில் பொறுமையை அடையவேண்டுமேயல்லாது பாபிகளுக்குப் பதில் செய்ய நினைக்கக்கூடாது. அங்ஙனமே ஞானங்குசமென்ற சின்ன ப்ரகரணத்தில் பெரியோர்கள்

अपारयन् बोधयितुं पृथग्जनान् असत्प्रवृत्तेष्वपि नासदाचरेत् ।
अशक्नुवन् पीतविषं चिकित्सितुं पिबेद्विषं कः स्वयमप्यबालिशः ॥

"பாமரஜனங்களை நல்லது சொல்லிப் போதிக்கமுடியாததவன் அவர்கள் கெடுதியைச் செய்துவிட்டாலும் தானும் கெடுதலைச் செய்துவிடக்கூடாது. விஷம் தின்றவனைச் சிகித்ஸைசெய்து ஸ்வஸ்தப்படுத்தமுடியாமற்போனால் எந்த மூடன்தான் தானும் விஷத்தைத் தின்பான்" என்று உபதேசித்திருக்கிறார்கள். அன்றியும் துஷ்டர்கள் கடுமையாகப் பேசினாலும்

कश्चित्पुमान् क्षिपति मां प्रतिरूक्षवाक्यैः श्रीमत्क्षमाभरणमेत्य मुदं व्रजामि ।
शोकं व्रजामि पुनरेवमयं तपस्वी चारित्रतः स्खलितवानिति मन्निमित्तम् ॥

"ஒரு மனிதன் கடுஞ்சொற்களால் என்னை நிந்தித்தாலும் நான் கோபத்தையடையாமல் பொறுமையென்னும் பூஷணத்தைபூண்டு ஸந்தோஷத்தையே அடைந்துவிடுகிறேன். ஆனால் இந்த மனுஷ்யன் என் நிமித்தமாக நன்னடத்தையினின்று தவறிவிட்டானே என்றுமாத்திரம் சோகத்தையடைகிறேன்" என்று பெரியோர் அனுபவித்தபடி பொறுமையடைந்து ஸந்தோஷப்படவேண்டும்.

அன்றியும் பாபவாதம் செய்பவன் பாதோஷத்தைப் போக்குவா ணும். எங்ஙனமெனில் குழந்தையின் சரீரமலத்தை அன்புள்ள தாயும் முகத்தைக் கோணிக்கொண்டு கையில் வைக்கோலை வைத்துக்கொண்டு எடுத்தெரிவாள். அபவாதம் சொல்லுபவனோவெனில் பாபமலத்தை நாக்கால் நக்கிப்போக்குவான் என்று நீதி நூல்களில்

अपवादी च माता च द्वाविमौ मलहारिणौ ।
माता हरति हस्तेन अपवादीतु जिह्वया ॥

"அபவாதம் சொல்லுகிறவனும், தாயாரும் இவ்விரண்டு பேர்களும் மலத்தையெடுப்பவர்களாம். அதில் தாய் கையினாலும் அபவாதி நாக்கினாலுமெடுப்பான்" என்று சொல்லியிருப்பதால் நம்மை தூஷித்தவனிடம் நன்றி பாராட்டவேண்டுமென்பது நம் முன்னோரின் முக்கியோபதேசம். அங்ஙனமே ஞானங்குசத்தில்

स्वधर्म पीडामविचिन्त्य योऽयं मत्पापशुद्धयर्थमिह प्रवृत्तः ।
न चेत् क्षमामप्यहमत्र.कुर्यां मत्तः कृतघ्नो वद कीदृशोऽन्यः ॥

"(பிறரைத் தூஷித்தால்) தன்னுடைய தர்மத்திற்கும் பீடையுண்டாகிவிடுமேயென்பதைக்கூட கவனிக்காமல் (அபவாதம் சொல்லியாவது) என் பாபத்தைத்தொலைக்கத்தலையெடுத்தவனுக்கு (காசாலும் பணத்தாலுமுபகாரம் செய்யாவிடினும்) அவன் விஷயத்தில் பொறுமையையாவது நான் பாராட்டாவிட்டால் என்னைவிட செய்தநன்றி மறந்தவன் வேறு எப்படியிருப்பான்" என்று பெரியோர்களின் ஸ்வாநுபவம் உபதேசிக்கப்படுகிறது. அன்றியும் தூஷிப்பவனொருவனில்லாவிடில் எவனிடம்பொறுமையைக்காட்ட முடியும். ஸ்தோத்திரம் செய்பவரிடம் காட்டுவது பொறுமையாகாது. ஆகவே அபவாதியைக் கண்டால் மரியாதைகூட செய்வது நன்று. அங்ஙனமே ஞானங்குசத்தில்

निराकरिष्णु र्यदि नोपलभ्यते भविष्यति क्षान्तिरनाश्रया कथम् ।
यदाश्रयात् क्षान्तिफलं मयाऽऽप्यते स सत्कृतिं कामिह नाम नार्हति ॥

"நமது தர்மவார்த்தையை நிராகரித்துப் பேசுகின்ற துஷ்டனொருவன் கிடைக்காவிடில் பொறுமை ஆசிரயமில்லாமல் எப்படி இருக்கும். எவனையாசிரயித்துப் பொறுமையின் பயன் எனக்குக்கிடைக்கின்றதோ. எந்த மரியாதைக்குத்தான் அவன் அர்ஹனில்லை"

என்று கூறப்படுகின்றது. அன்றியும் நானொருவன் எதிர்ப்பட்ட படியாலன்றோ ஒருவன் அபவாதம் சொல்ல முயன்றான். அந்த பாவம் அவனைச் சேரும்படியானதற்கு நானே காரணமானதால் இந்த ஸம்பவத்தில் நானே வெட்கமடையவேண்டுமேயன்றி பிறனையொன்றும் சொல்லக்கூடாதென்றும் பெரியோர் நினைப்பாராம்.

अहं नचेत् स्यां मयि दुष्टभावनामिमे व्रजेयु र्न निराश्रया जनाः ।
तदेनसा योजयिता परान् स्वयं ममैव युक्तात्र पराह्यपत्रपा ॥

"நானில்லாவிடில் துஷ்டபாவனை செய்ய இடமில்லாமையால் இதை இந்த ஜனங்கள் அடையப்போவதில்லை. அதனாலேற்படும் பாபத்தையுமடையமாட்டார்கள். பிறர்களை அந்த பாபத்தோடு சேரும்படி செய்த நான்தான் இந்த விஷயத்தில் மிகவும் வெட்கமடையவேண்டியது உசிதம்" என்று ஞானங்குசத்தில் பொறுமையுள்ள புண்யபுருஷர்களின் ஸ்வானுபவம் சொல்லப்படுகிறது. பராபவாதம் செய்தால் பாபமுண்டென்பது ஸ்மிருதிகளிலும்

परापवादन मनृतं रसना वदति प्रतिक्षणं तेन ।
परहानिः का व्यर्थं मनुजोह्यतिपापभाग्भवति ॥

"பராபவாதத்தையும், பொய்யையும் பிரதிக்ஷணமும் நாக்கு சொல்கிறது. அதனால் பிறருக்கு என்ன கெடுதி? வீணில் அவன் பாபத்தைமாத்திரமடைகிறானேயன்றி வேறில்லை" என்பதாதி வசனங்களிலும் பிரஸித்தமானது. இந்த பாபம் அபவாதிகளுக்கும் நேரக்கூடாதென்று நினைக்கவேண்டுமானால் பொறுமையின் பெருமை எவ்வளவென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அன்ய நிந்தை செய்வதால் தற்காலத்தில் கொஞ்சம் ஸந்தோஷமுண்டாவதாகவும், அதே புருஷார்த்தமென்பதாகவும் சிலர் நினைப்பார்களானால் அப்படியாவது அவர்கள் ஸந்தோஷத்தையடையட்டுமென்றே நினைக்கவேண்டியது. பிராணிகள் ஸந்தோஷப்படுவது அரிதல்லவா? அங்ஙனமே ஞானங்குசத்தில்

सततसुलभदैन्ये निस्सुखे जीवलोके
यदि मम परिवादात् प्रीतिमाप्नोति कश्चित् ।
परिवदतु यथेष्टं मत्समक्षं तिरोवा
जगति हि बहुदुःखे दुर्लभः प्रीतियोगः ॥

"எப்பொழுதுமே ஏழ்மையை இலகுவாயடைந்து சுகமேயில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் கர்மபூமியில் என்னைநிந்தித்து ஒருவன்பிரீதியையடைவதாயிருந்தால் அவன் என்னெதிரிலேயோ அல்லது என்னைக் காணுமிடத்திலேயோ இஷ்டப்படி நிந்தித்து ஸந்தோஷத்தையடையட்டும். அதிக துக்கமுள்ள இவ்வுலகத்தில் ஸந்தோஷம் கிடைப்பது அரிதல்லவா" என்று உபதேசிக்கப்படுகிறது. பின்னும் பொறுமையின் பெருமை பாரதாதிகளில் அநேக இதிஹாஸமூலமாக நிரூபிக்கப்படுகின்றது. அதை நன்குயறிந்து அன்னியர் தன்னைப்பற்றி நிந்தைசெய்துவிட்டாலும் திருப்பி நிந்திக்காமலும் கோபங்கொள்ளாமலும், மனதில் எவ்வித விகாரங் கொள்ளாமலும் எல்லோரும் பொறுமையோடிருந்து புண்ணியப் பெருக்கால் மனஸ் சுத்தியையடைந்து சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# ஆஹாரநியமம்.

(45-வது பக்கத்தொடர்ச்சி)

## புஜிக்கத்தகாதவை.

பகவத்கீதையில் பகவான் அர்ஜுனனை வ்யாஜமாகக்கொண்டு ஜகத்துக்கு உபதேசிப்பதாவது,

आहारस्त्वपि सर्वस्य त्रिविधो भवति प्रियः ।

"எல்லோருக்கும் பிரியமான ஆஹாரம் மூன்றுவகை" என்று துடங்கி ஆஹாரத்தை ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று பிறித்து,

आयुस्सत्त्वबलारोग्यसुखप्रीति विवर्धनाः ।
रस्याः स्निग्धा स्थिरा हृद्या आहारास्सात्त्विकप्रियाः ॥

"தீர்க்கமான ஆயுள், கடுமையானகஷ்டம் நேரிடினும் விகாரமடையாத மனோதைரியத்துடன் இருக்கும் தன்மை, ஸகல காரியங்களையும் சிரமமன்னியில் நிர்வஹிக்கும்படியான சரீரபலம், வாதபித்தாதிகள் சரியான நிலைமையிலிருந்து அதனால் ரோகமில்லாமை

புஜித்தபின் ஜீர்ணமாகும்போது ஸுகம்முதலிய குணஸமூஹத்தை தரக்கூடியவைகளும் புஜிக்குங்காலையில் ருசிக்குக் குறைவன்னியில் ஆவலுடன் புஜிக்கத்தக்கவைகளும், சாப்பிடத்தகுந்த மதுரமான ரஸத்துடன் கூடியவைகளும் நெய் முதலிய ஸ்நேஹமுள்ளவைகளும் அதிலுள்ள ரஸத்தின்சக்தியினுல் வெகுகாலம் சரீரத்தில் ஸ்திரமாகயிருந்து சரீரத்திற்கு நல்ல பலம் தரக்கூடியவைகளும், பார்க்கும்போதே மனதிற்குப் பிரியமானவைகளுமாகிய இம்மாதிரியான குணங்களுடன்கூடியஉணவுகளேஸாத்விகர்களுக்குப் பிரியமாயிருக்கும். அவ்வுணவுகளை உண்பவர்களின் சித்தமானது ஸத்துவகுணமுள்ளதாக ஆகும்'' என்றும்

कट्वम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ॥

"அதிகமான கசப்பு, அதிகப்புளிப்பு, மிகுந்த உவர்ப்பு, கடுமையான உஷ்ணம், மிகவும் காரம், மிகவரக்ஷை, மிகஎரிச்சல் இவைகளை உண்டுபண்ணக்கூடிய ஆஹாரங்களைச் சாப்பிடுகிறவர்களுக்கு தற்காலத்தில் கஷ்டமுண்டாவதுடன் பிந்தி துக்கமும் வியாதியும் மேலிட்டு ரஜோகுணம் விருத்தியடையும்'' என்றும்,

यातयामं गतरसं पूति पर्युषितं च यत् ।
उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामसप्रियम् ॥

"வெகுநாழிகைக்குமுன் பக்குவம் செய்யப்பட்டதும், அதனுலேயே அந்தப்பதார்த்தத்திற்கு இயற்கையான குணமில்லாததும், கெட்டவாஸனையுள்ளதும், பக்குவமானபிறகு ஒரு இரவு சென்று அதனுல் அந்த உணவில் வேறு விதமான ரஸம உண்டாகிவிட்ட பர்யுஷிதம் (பழையதும்) ஆசாரியர்கள் முதலிய பெரியோர்களைத் தவிர இதரர்கள் சாப்பிட்டு மிகுந்ததும் பஞ்சமஹாயக்ஞாதிகளில் உபயோகப்படுத்தாமலிருப்பதும் இம்மாதிரியான ஆஹாரத்தினுல் தமோகுணமே விருத்தியடையும்'' என்றும் பகவான் உபதேசித்திருப்பதால் சாஸ்திரங்களால் நிஷேதிக்கப்பட்டிருக்கும் ஆஹாரங்களைத்தவிர்த்தும் விதிக்கப்படுமவைகளைச் சாஸ்திரங்களில் சொல்லிய காலதேசாதிநியமங்களை அனுஸரித்தும் ஸாத்விகமான ஆகாரங்களைப் புஜிப்பவர்களே சித்தசுத்தியையடைந்து ஸத்கர்மானுஷ்டானங்களால் பகவானை ஆராதித்து நற்கதியடைவார்கள். இங்

நனன்றிக்கே ஆஹாராதிகளில் விதிவிலக்கில்லாமல் கண்டவிடங்களில் எதையும் உண்டு திரிகிறவர்களுக்கு

पापं प्रज्ञां नाशयति क्रियमाणं पुनः पुनः ।
नष्टप्रज्ञः पापमेव पुनरारभतेऽर्जुन ॥

"சாஸ்திரத்தில் தடுக்கப்பட்ட பாபமான காரியத்தை அடிக்கடி செய்வதால் அறிவு குன்றி மேன்மேலும் பாபத்தையே செய்ய முயலுகிறான்" என்கிறபடி பாபபுத்தியே மேலிடும். ஆகையினால் சூடான தேத்தண்ணீர் என்று பலகை தொங்கவிடப்பட்டிருக்கும் கிளப்புகளில் ஸந்தியாகாலத்தையும் கவனியாமல் நுழைந்து நானா ஜாதியர்களும் எச்சில்பண்ணிக்குடித்த பாத்திரங்களில் அசுத்தமான காபி தேத்தண்ணீர் முதலியவைகளைக் குடிப்பவர்கள் இவ்வுலகில் ஆஸ்திகர்களான பெரியோர்களால் திரஸ்கரிக்கப்படுவதுடன் அதிகமான வியாதிகளாலும் பீடிக்கப்படுகிறார்கள் என்பது பிரத்தியக்ஷமே. ஆனால் குடும்பார்த்தமான காரியங்களைக்குறித்து வெளியூர்களுக்குச் செல்லுகிறவர்கள் அவ்வப்போது உண்டாகும் பசி தாகங்களை நிவர்த்திப்பதற்காகக் காபிக்கிளப்புகளில் நுழைவதும் கூடியவரையில் சுத்தமான ஆஹாரங்களை உண்பதும் பிழையாகுமாவென்று சிலர் கேட்கலாம். சாஸ்திரங்களில் நம்பிக்கையில்லாமல் சரீரஸௌக்யத்தையே பெரிதாக மதித்தவர்களுக்கு இக்கேள்வி தகுதியுடையதாயினும் ஆஸ்திகர்களான வைதிகர்கள்

यतो यतो निश्चरति मनश्चंचलमस्थिरम् ।
ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ॥

நிலையற்றதும் அதிசபலஸ்வபாவமுள்ளதுமான மனஸ்ஸானது தன் இஷ்டப்படி சப்தாதிகளான எந்த எந்த விஷயங்களில் இந்திரியங்களை இழுத்துக்கொண்டுபோகிலும் அந்தந்த விஷயங்களிலிருந்து மனதைஅடக்கி ஸ்வாதீனம்செய்யவேண்டும் என்றவசனத்திற்குக் கட்டுப்பட்டவர்களாதலால் அவர்களுக்குத் தகுதியல்ல.

ब्राह्मणस्य हि देहोऽयं क्षुद्रभोगाय नेष्यते ।
कृच्छ्राय तपसे चैव प्रेत्यानन्तसुखाय च ॥

வெகு ஜன்மங்களில் செய்த புண்ணியவசத்தினால் கிடைத்த பிராமண சரீரமானது அல்பசுகங்களை அனுபவித்து இந்திரியங்களைத்

திருப்தி செய்விப்பதற்காக ஈசுவரனுல் கொடுக்கப்பட்டதாக எண்ணக் கூடாது. இவ்வுலகில் கிருச்சிர சாந்திராயணுதி விருதங்களையும் தபஸ்ஸையும் செய்து மறுமையில். முடிவில்லாத பரமபுருஷார்த்தமான மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைந்து பிரும்மானந்தத்தை அனுபவிப்பதற்கல்லவோ பகவதனுக்ரஹத்தினுல்இப்பிராம்மண சரீரம் கிடைத்திருக்கிறது" என்ற வசனப்படி கிடைக்கும் அந்தப்பரமலாபத்தை இழந்து அல்பமான நாக்கையும் வயிற்றையும் திருப்தி செய்விக்க யத்தனிப்பதைவிட வேறு மடமையுண்டோ जितं सर्वरसेजिते நாக்கையடக்கினுல்எல்லா இந்திரியம்கெட்ட வழியில் செல்லாமல் தானேயடங்கிவிடும். ஆகையால் புஜிக்கத்தகாதவை என்று சாஸ்திரங்களில் விலக்கியிருப்பதை விலக்கவேண்டும். விலக்கத்தக்கவை எவையெனில் —

जातिदुष्टं क्रियादुष्टं कालाश्रयविदूषितम्
संसर्गाश्रयदुष्टं च सहृल्लेखं परित्यजेत् ॥

ஜாதியினுலேயே துஷ்டமானதும் காரியத்தினுல் கெட்டுப்போனதும் காலத்தினுல் துஷ்டமானதும் கெட்ட பதார்த்தங்களின் சேர்க்கையினுல்துஷ்டமானதும், கெட்டமனிதர்களின் ஸம்பந்தத்தினுல் துஷ்டமானதும், பார்த்தமாத்திரத்திலேயே இதை உண்ணலாமா ? கூடாதா ?என்று மனஸ் ஸம்சயமுண்டாகக் கூடியதுமானவைகள் பரிஹரிக்கத் தக்கவைகள். ஜாதி துஷ்டமாவது

लशुनं गृञ्जनं चैव पलाण्डुकवकानि च ।
वार्ताकनालिकालाबुश्चवेयाज्जाति दूषितम् ॥

முள்ளங்கி, வெங்காயம், பத்துவிதமான பூண்டுகளும், கஞ்சா, வெண்கத்தரிக்காய், வேளை, சுரைக்காய் முதலிய இவைகள் ஜாதி துஷ்டங்களாகையால் இவைகள் உண்ணத்தகாதவைகள்.

கிரியாதுஷ்டமாவது—

न भक्षयेत् क्रियादुष्टं यद्दृष्टं पतितादिभिः ।

பதிதர்கள் முதலியவர்களால் பார்க்கப்பட்ட அன்னம் கிரியா துஷ்டமாகையால் அதுவும் உண்ணத்தகாததே.

காலதுஷ்டமாவது—

कालदुष्टं तु विज्ञेयमस्नेहाक्तं चिरस्थितम् ।

தைல பக்குவமல்லாமல் ஜலத்தினுலாவது ஆவியினுலாவது சமைக்கப் பட்டு வெகு நாழிகையான ஆஹாரங்கள் காலதுஷ்டங்களாகையால் அவைகளைச் சாப்பிடக்கூடாது

सुराद्यशुद्धसंस्पृष्टं पीयूषादिसमन्वितम् ।
संसर्गाद्दुष्यते तद्धि शूद्रोच्छिष्टवदाचरेत् ॥

ஸுரை முதலிய கெட்ட பதார்த்தங்களுடன் ஸம்பந்தப்பட்டதும் புதிதாய் கன்றுபோட்டு ஏழு நாளைக்கு மேலாகாத பசுவின் பாலாகிற பீயூஷம் முதலியவைகளுடன் கூடிய உணவுகளும் சேர்க்கையினுல் கெட்டுப்போய் விட்டபடியால் சூத்திரர்கள் புஜித்த பிறகு சமையலறையில் பாண்டங்களில் இருக்கும் உச்சிஷ்டமான உணவைப்போல் நினைக்கவேண்டும் என்று சாஸ்திரங்கள் கட்டளையிடுவதால் ஸம்ஸர்க்கதுஷ்டமான ஆகாரமும் உண்ணத்தகாததென்றறியவும்.

अभोज्यानां द्विजातीनामन्नमाश्रयगर्हितम् ॥

உயர்குலத்தில் பிறந்த பிராமணனுயிருந்தபோதிலும் ஹீனமான தொழில்களைச் செய்தால் அந்தப்பிராமணனுடைய அன்னத்தை புஜிக்கலாகாதென்று சாஸ்திரங்கள் தடுப்பதால் அவர்களுடைய அன்னத்தை ஆச்ரயத்தினுல் கெட்டதென்று அறியவும். இது வரையில் உண்ணத் தகாதவைகளை ஏகதேசம் எடுத்துரைத்தேன். அவைகளைவிலக்கி விதிக்கப்பட்டவைகளையே புஜித்து யாவரும் சித்தசுத்தியை அடைவார்களாக. (தொடரும்)

வெ. ஸ்ரீநிவாஸதாதாசாரியார்.

## ஸ்ரீவாசுதேவபிரம்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் வித்திவைபவம்.

புண்ணிய பூமியாகிய பாரதமண்டலத்தில் அவ்வப்போதுவரும் இடையூறுகளைக்களைந்து வர்ணுசிரம தர்மங்களை நிலைநாட்டுவதற்கு அனேக மஹான்கள் தோன்றி மறைந்து வருகிறுர்கள் என்பது ஆஸ்திக சிகாமணிகள் யாவரும் அறிந்ததே. அக்கண்டத்திலும் விசேஷமாய் இக்கலியிலும் தோன்றும் துர்வாதிகளின் துராக்ஷேபங்களைக் களைந்து, கூடியமட்டில் வர்ணுசிரமதர்மங்களை தென்

ளுட்டார் அனுட்டித்து வருகின்றனர் என்பதும் அனுபவத்தாலே விளங்குகின்றது. அத்தென்னுட்டிற்குத் திலகமாய் பிரகாசிக்கும் சோளமண்டலமானது, அனேகசிவாலயங்களையும் விஷ்ணுவாலயங்களையும், அக்ராஹாரங்களையும், நதிதீரங்களில் மடங்களையும், பிருந்தாவனங்களையும் தன்னிடத்தில் ஸ்திரமாக அமையப்பெற்று நிஷ்காம கன்மாக்களை பகவதர்ப்பணம் செய்து மனதை நிர்மலமாக்கி பிரம்மானுஸந்தானத்திற்குத் தக்க யோக்யதை வாய்ந்த வர்ணுசிரமிகளை வளர்ந்தோங்கச்செய்ய சக்தி பெற்றிருப்பதும், சொல்லாமலே விளங்கும்.

இவ்விதமஹிமை ஏற்படுவதற்கு முக்கியமான காரணம், அனேக கிளைகளாகப் பிரிந்து பிரவஹிக்கு தன்னிருகரைகளிலும் அனேக புண்ணிய விருக்ஷங்களை வளரச்செய்து அளவிலா ஞானந்தத்தைப் பயக்கும் காவேரி மஹாநதியே என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல், பிரத்யக்ஷமாய் உள்ளதே.

இக்கலியில் சுமார் 300-வருடங்களுக்கு முன் பாண்டிய நாட்டுத்தலைநகராகிய மதுரைமாநகரில் திருமலைநாயக்கரின் தர்மாதிகாரியும், ஸ்ரீ மத் அப்பய்ய தீக்ஷிதாளின் தம்பி பௌத்திருமான ஸ்ரீமான் நீலகண்ட தீக்ஷிதாள் தமது சிவலீலார்ணவமஹாகாவ்யத்தில் அனுபவத்தோடு மொழிந்த சில சுலோகங்களை இதற்கிணங்க எழுதுகிறேன்.

हव्याय यत्रापततां सुराणामातिथ्यनिर्वर्तनतोऽनुवेलम् ।
गन्धर्वविद्याधरकिन्नराद्या निर्विद्य निन्दन्ति पथि स्थितिं स्वाम् ।
अध्येतुमध्यापयितुं च तन्त्राण्याहर्तुमर्थानथ चोपभोक्तुम् ।
स्वर्गापवर्गौ च वशे विधातुं जात्यैव यस्मिन्द्रविडा निरूढाः ॥
स्वादीयसी यत्र कवेरजैव ततस्तरां केरफलोदकानि ।
ततस्तमां चापि गिरां विलासाः प्रसन्नगम्भीरपदाः कवीनाम् ॥
सान्यत्र सिन्धुर्ननु यत्र कुल्या तेऽन्यत्र धन्या इह ये कदर्याः ।
अभ्यस्ताविद्या इव येऽत्र किंचिदन्यत्र विद्यागुरवस्तएव ॥

தீக்ஷிதர்களால் செய்யப்படும் ஸோமாதிகளான யக்ஞங்களில் ஹவிர்ப்பாகம் பெறுவதற்கு வந்து போய்க்கொண்டிருக்கின்ற தேவர்களுக்கு அடிக்கடி அதிதிஸத்காரம் (விருந்தோம்பல்) செய்ய நேருவதால் அத்தேவ வகுப்பைச் சார்ந்தவர்களும் காவே

ரியின் இருகரைகளிலும் மார்க்கத்தில் அமைக்கப்பெற்ற ஆலயங்களில் வசிக்கின்றவர்களுமான கந்தர்வாதிகளான தெய்வங்கள் அதிதி ஸத்காரம் அடிக்கடி செய்யநேருவதற்கு இக்காவேரி நதியின் மார்க்கத்திலிருப்பதே காரணமாகிறது என்று அங்கு தங்களிருப்பை வெறுக்கின்றார்கள் என்று நிந்தாஸ்துதியால் வர்ணிக்கப்படுகிறது. 1.

வேதாதிகளான சாஸ்திரங்களை ஓதவும் ஓதுவிக்கவும் பொருளைத் தேடவும் அனுபவிக்கவும் விண்ணுலகையும் முக்தியையும் வசமாக்கிக் கொள்ளவும் பிறப்பாலேயே திராவிடர்கள் சோளநாட்டில் தேர்ந்தவர்கள். 2.

யாதொரு சோளநாட்டில் காவேரி மஹாநதியின் தீர்த்தமே மிக்க சுவை பொருந்தினது. அதைக் காட்டிலும் சுவையுள்ளது இளந்தேங்காய்களின் நீர், அதைக்காட்டிலும்மிக்கச்சுவைவாய்ந்தவை பிரஸன்ன கம்பீரபதங்களமைந்த மஹாகவிகளின்வாக்குகள்

காவேரி நதியின் கிளையான சோளநாட்டு வாய்க்காலே மற்ற நாட்டாருக்கு நதியாகத் தோன்றுகிறது. சோளநாட்டில் உள்ள அற்பர்கள் மற்ற நாடுகளில் தன்யர்களாய் விளங்குகின்றனர். சோளநாட்டில் சிறிது படித்தவர்கள் போன்றவர்கள் மற்ற தேசங்களில் வித்யாசார்யாளாகப்பிரகாசிக்கின்றனர். 4.

இனி பிரகிருதத்தில் இறங்குகிறேன். அச்சோளநாட்டில் காவேரியின்வடகரையில்திருவையாற்றுக்கு சுமார்ஐந்துமைல்தூரத்தில் தன்னிடத்தில் பணிந்து உபாசிக்கின்றவர்களுக்குநிர்விக்னமாய்இஷ்டஸித்தியையளித்து வருவதால்பொருள்பொருந்தினபெயர்பெற்ற கணபதி அக்ரஹாரம் இருக்கிறதென்பதைப்பற்றி அதிகமாகக்கூறவேண்டிய அவசியமில்லை. அவ்வக்ரஹாரத்தில்அமைந்துள்ளதும் அரசு முதலிய புண்ணிய விருக்ஷங்களாலும் தேவதாராதனத்திற்கு உரிய புஷ்பங்கள் நிறைந்த பூந்தோட்டங்களாலும் மனதைக் கவர்கின்ற மடத்தின் அருகிலுள்ள அனேக பிரம்மநிஷ்டாளின் ஆஸ்தானங்கள் தர்சனமாத்திரத்தாலேயே பார்ப்பவர்களின் பாவங்களைப்போக்கி, மனதை நிர்மலமாக்கி வேதாந்த விசாரணை செய்யத் தூண்டுகின்றன என்பதும் அனுபவசித்தமே. ஷ ஆஸ்தானங்களுள் கிருஷ்ணேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் பரம காருண்யம் பெற்று ஸன்யாஸம் பெற்று 50-வருடங்கள் ஸந்யாஸாச்ரமத்தை அனுஷ்டித்து ஸகலமான கிருஹஸ்தர்களையும் ஸ்வா

சாரானுஷ்டானங்களை வழுவாது நடத்தச் செய்தும் பிரஸ்தானத் திரயத்தையும் சமாதி குணங்களமைந்த கிருஹஸ்தர்களுக்கும் துரீயாச்ரமிகளுக்கும் பிரவசனம் செய்து பிரம்மானந்தானுபவத்தில் ஈடுபட்டு விளங்காநின்ற வாஸுதேவ பிரம்மேந்திரஸரஸ்வதீஸ்வாமிகளின் ஸித்திவைபவத்தைக் கூற முன் வருகிறேன்.

ஷை மஹாஸ்வாமிகள் தங்களுடைய சரீரயாத்திரையை காவேரி நதிக்கரையிலுள்ள மடங்களிலேயே நடத்தினர்கள். அவைகளிலும் விசேஷமாக கணபதியக்ரஹாரம், மாயவரம், கோழுவத்தி அசிக்காடு, ஸித்தமல்லி, அரயபுரம் இவைகளே ஸ்வாமிகளுக்கு முக்கியங்களாய் இருந்தன. அதற்குக் காரணம் விவஸாயமொன்றையே மட்டிலும்போதுமெனக்கருதிஸ்வக்ராமத்திலேயேயிருந்து வேதாத்யயனமும் அனுஷ்டானமும் செய்து ஸாதுஸேவையிலேயே பெரும்பாலும் ஈடுபட்டு காலக்ஷேபத்தை ஈசுவரார்க்ளைப்படி நடத்திவரும்கிருஹஸ்தர்களின் ஆதரவேஎன்பது எனதுதிண்ணம். மஹாஸ்வாமிகளின் பரம்பரையில் வெகுகாலமாகவே முன்னோர்கள் சாந்திபாடம் பண்ணி வேதாந்த தத்துவத்தை உணர்வது வழக்கமாயுள்ளது. அம்மஹாஸ்வாமிகளின் சரணதூளியையும் உபாசித்து சாந்திபாடம்பண்ணி அவர்களின் அனுக்ரஹம்வாய்ந்த சிஷ்யகோடிகளில் ஒருவனாகிய நான் ஷை மஹாஸ்வாமிகளுக்கு சென்ற தைமீ 20உ புஷ்ய பௌர்ணமி திங்கள் கிழமை நடந்த மஹாபூஜைக்கு வந்து சிஷ்யகோடிகளின் ஆதரவுபெற்று மஹன்யாஸாதிகள் புரஸ்ஸரமான அபிஷேகத்தையும் அர்ச்சனங்களையும் கண்டு பரமானந்தங்கொண்டேன்.

அப்போது ஓர் புறம் திவ்யமேளங்களும் பாண்டுகளும் தங்களுடைய ஒலியை ஆகாயம் எட்டும்படி பரப்பின. அங்கு நிர்மலமான மனதைப் பெற்ற நான் ஷை கிராமத்து மஹாஜனங்களும் கீழ் குறிப்பிட்ட கிராமத்து ஜனங்களும், மற்றும் மதுரை, திருச்சி, முதலான நகரத்திலிருந்துவந்த மஹாஜனங்களும் ஷை மஹாஸ்வாமிகளின் முக்கிய சிஷ்யர்கள் யதிவாள் முதலானவர்களின் சந்நிதியில் ஆசாரியானுக்ரஹத்தால் தோன்றின சில ச்லோகங்களைப் படித்து காலத்திற்கேற்றவாறு சுருக்கமாய் உபன்யசித்ததை இவ்வார்யதர்மத்திற்குப் பொருத்தமாயுள்ளதால் எழுதுகிறேன்.

श्री मीनाक्षी सुन्दरेश्वराभ्यां नमः ॥
॥ पुण्यश्लोक चरित संग्रहः ॥

श्रियं दिशतु सर्वेषां शाश्वतीं स गजाननः ।
सुधाशा अपि काङ्क्षन्ति विभूतीर्यत्प्रसादतः ॥

श्री वासुदेवेन्द्र सरस्वतीं गुरुं प्रणम्य तत्पुण्यचरित्र सङ्ग्रहम् ।
ब्रुवेऽभिकाङ्क्षन्परिशुद्धिमात्मनः शृण्वन्तुहृसाश्रयमास्तिकोत्तमाः ॥२॥

श्रीमत्पंचनदस्थले गुरुमणिः वैलिङ्गजातिर्द्विजः
क्रिस्त्वब्दे रसभूतनागधरणीसंख्ये जनिं प्राप यः। (१८५६)
ग्रामे श्लाघ्यमठान्विते गणपतेरिन्दुम्निनन्दक्षितौ (१९३१)
वर्षे स्वे महिमन्यनन्यसुलभे लेभे प्रतिष्ठां स्थिराम् ॥३॥

ब्रह्मीभूतगुरुस्थाने कावेरीप्रान्तशोभिते ।
मठे ब्रह्मिष्ठसंपूर्णे वासुदेवेन्द्रसंयमी ॥४॥

प्रमोद मकरे शुक्लपञ्चम्यां स्थिरवासरे ।
उत्तरप्रोष्ठचरणयुक्तेऽवाप्तोत्परं पदम् ॥५॥

संप्राप्तात्मगुणोदयं गुरुमणिं बाल्येऽपि शुद्धाशयं
कालेयं दुरितं प्रबाधितुमिमं नालंबभूवेति यत् ।
नाश्चर्यं महतां कुले जनिमतां प्रारब्धशेषाद्भुवि
स्वाचारानधितस्थुषां विबुधवाक्संस्कारपूतात्मनाम् ॥६॥

पितुःसकाशान्निगमं यथावदधीत्य साङ्गं कृतदार एषः ।
उत्पाद्य पुत्रं विरतिं प्रपन्नः पञ्चाधिके विंशति वर्ष एव ॥७॥

प्रपद्य कृष्णेन्द्रमयं परीक्षितः तुष्टादमुष्मादुपदेशमाप ।
अग्निद्विपेभावनि(१८८३)वत्सरेऽगमत्स्वं योगपट्टं गुरुणा प्रदिष्टम् ॥८॥

श्री शङ्करानन्तरमात्मविद्याप्रकाशकेषु प्रथितेषु मुख्याः ।
विद्यावनाख्याः श्रुतिभाष्यकाराः श्रीवासुदेवाश्च विभान्ति लोके ॥ ९ ॥

पञ्चाशद्वत्सरैरस्मद्गुरुराड्व्यासपूजनाम् ।
संन्यासाश्रमनिष्ठां च यथाविधि समातनोत् ॥१०॥

मधुरापुरवास्तव्य सुब्रह्मण्य समीरितः ।
पुण्यश्लोक कथासारः ब्रह्मानन्दाय कल्पताम् ॥

को. वै. सुब्रह्मण्य शास्त्री,

## புண்யசுலோக சரித ஸங்கிரஹம்.

அமிழ்தத்தைப் புசிக்கும் வானவர்களும் எவருடைய அனுக்ரஹத்தாலேயே ஸகலசித்திகளைப்பெறுகின்றனரோ, அந்தகஜமுகக் கடவுள்நம்யாவருக்கும்அழிவில்லாத நித்தியநிரதிசயமானமோக்ஷ ஸ்ரீயை அளிக்கட்டும். 1.

ஸ்ரீ வாசுதேவ பிரம்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் எனப்பெயர் வாய்ந்த ஸத்குருவை வணங்கி அவாளின் புண்ணிய சரித்திர சுருக்கத்தை எனது ஆத்மசுத்தியை நாடிக் கூறுகிறேன். பரமஹம்சாளை ஆச்ரயித்த சரித்திரமானதால் ஆஸ்திகசிகாமணிகள் அதைக்கேட்க வேண்டும். 2

வியவகாரத்தில் சீக்கிரமாய் மனதுக்குப்புலப்படும்சக்திவாய்ந்திருப்பால் இங்கு ராஜகீயமான சகத்தைக் குறிப்பிட்டிருப்பதை பெரியோர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதாவது திருவையாற்றில் 1856 ல் பூர்வாசிரமத்தில் நமது ஆசார்யாள் தெலுங்கப் பிராம்மணனாக ஜனித்தார், அம்மஹான் தற்காலம் 1931-ல் கொண்டாடக்கூடியமடங்கள் நிறையப்பெற்ற கணபதி அக்ரஹாரத்தில் மற்றவர்களுக்கு அரிதான ஸ்வமஹிமா என்று கூறப்படுகிற ஆத்மஸ்வரூபத்தில் ஸ்திரமான பிரதிஷ்டையை அடைந்தார்கள்.

பிரம்மநிஷ்டாள் ஸித்திபெற்ற குருஸ்தானங்களமைந்ததும் காவேரி தீரத்தால் சோபிக்கிறதுமானமடத்தில் நமதுவாஸுதேவ பிரம்மேந்திர ஸரஸ்வதீசுவாமிகள் பிரமோத ஸம்வத்ஸரம் தைமாதம்வளர்பிறை பஞ்சமி உத்தரப்ரோஷ்டபதபசேர்ந்த ஸ்திர வாரத்தில் காலையில் பரமபதத்தை அடைந்தார்கள். 4. 5.

இங்கு இம்மஹான் பீஷ்மாசாரியாளைப்போல காலத்தைஎதிர்பார்த்து மாயவாத்திலிருந்து தானே தீர்மானமாகநிர்ணயித்துமுந்தியே கணபதியக்ரஹாரம் குருஸ்தானத்திற்கு வந்து காத்திருந்தது ஸந்யாஸாச்ரமத்தை சரிவர அனுஷ்டித்துவந்த இவாள் விஷயத்தில் ஆச்சர்யமென்று சொல்வதற்கில்லை. ஸந்நியாஸாசிரமத்தை ஸரிவர நடத்திவரும் மஹிமையை உணர்ந்தே மற்ற யதிவராளும் சரிவர நடத்தல் வேண்டுமென்று காட்டுவதற்கு இது ஒரு அத்தாக்ஷியாகும்.

ஆன்மகுணங்கள்பெற்றவரும்இளமையிலேயேபசுரித்தமான மனோநிலையுள்ளவருமான இம்மஹானை கலிமலம்தன்புறுத்தவில்லை என்பது ஆச்சரியமில்லை. ஏனெனில் பிராரப்த கன்மாவின் சேஷத்தால் மஹத்துக்களின் குலத்தில் தோன்றி ஆசாரங்களை விதிவழுவாது அனுட்டித்து ஸம்ஸ்கிருத வாக்கால் பரிசுத்தமான ஆன்மாவைப்பெற்றிருப்பதால் அவர்கள் விஷயத்தில் இது இயற்கையே.

இம்மஹான் தனது பிதாவினிடம் வேதத்தை ஸாங்கமாக அத்யயனம் செய்து பின்பு கிரஹஸ்தாச்ரமத்தில் புகுந்து தனது கடனைப்போக்குவதற்காகவே புத்திரனை உண்டுபண்ணி பிள்ளையின் 1½-வயதிலேயே, (அதாவது குடும்பம் பாதுகாக்க வேண்டிய அவசியமான நிலைமையிலேயே) வைராக்யம் பெற்று கிருஷ்ணேந்திரஸரஸ்வதீ மஹாஸ்வாமிகளைச் சரணமடைந்து அவர்களால் நன்கு பரிசோதிக்கப் பெற்று உபதேசம் பெற்றார்கள். அப்போது அவர்களுக்கு வயது 25. பின்பு 1883-ல் குருவால் ஏவப்பட்டு யோகப்பட்டம் பெற்றார். யோகப்பட்டம் என்பது சிஷ்யாளின் தலையில் ஸாலக்ராமத்தை வைத்து ஆசாரியாளே அபிஷேகார்ச்சனாதிகள் செய்து அபேதத்தை அளிக்கும் ஓர் ஸந்நியாஸாச்ரம ரகசியம். 7-8.

ஸ்ரீ பகவத்பாதாளுக்குப்பிறகு சுமார் 1000-வருஷங்களுக்குப் பின்பு வேதபாஷ்யகாராளான வித்தியாரண்ய முனிவர்களும் அதற்கு சுமார் 1000-வருடங்களுக்குப் பின்பு நமது ஸ்வாமிகளும் பிரஸித்தாளான ஆத்மவித்யாப் பிரவசனஞ் செய்பவர்களில் முக்கியமானவர்கள். 9.

பின்பு இவ்வாறு ஸந்நியாஸாச்ரமம் பெற்று ஐம்பது வருஷங்கள் வியாஸபூஜை செய்து ஸந்நியாஸாச்ரமத்தை விதிப்படி இம்மஹான் அனுட்டித்தார். 10.

மதுரைமாநகரில் வஸிக்கின்ற சுப்பிரமணியன்என்றசிடனால் சொல்லப்பட்ட புண்யச்லோக கதையின்ஸாரமானது பிரம்மானந்தத்தைத் தரட்டும். 11

அன்றையதினம் பிராம்மண சந்தர்பணம் முதலானவை அவ்வக்ராஹாரத்து மஹாஜனங்களாலே நன்றாய் செய்விக்கப்பட்டது. இரவிலும் மஹான்களைப் பற்றின உபன்யாஸங்கள் மஹாபண்டிதர்களால் செய்யப்பட்டன. இரவில் ஸ்ரீ சடகோபாசாரியாள்

என்ற பாகவதசிகாமணியால் விபீஷண சரணாகதி பக்திரசத்தால் ஆனந்தபாஷ்பத்தைப் பெருகவிட்டு பக்தர்கள் ஆனந்திக்கும்படி கதை ரூபமாய் பக்கவாத்தியங்களுடன் திறமையாக உபன்யசிக்கப்பட்டது. இவ்விதம் ஆகவேண்டிய காரியங்கள் யாவும் மற்ற அக்ரஹாரங்களிலிருந்து வந்து பக்திசிரத்தையுடன் தர்சனம் செய்து வருகின்ற கிரஹஸ்தர்களால் நடத்தப்பட்டன.

இவ்வாரிய தர்மமானது வர்ணாசிரமதர்மங்களை வெளிக்காட்டவே விளங்கி வருகிறதால் எனது வியாஸத்தை ஏற்றுக்கொண்டது என்பது ஒரு காரணமாகச் சொல்ல இயலாது.

ஷை மஹாஸ்வாமிகளின் அனுஷ்டானாதிகளை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு மஹாஸ்வாமிகளே ஸத்ஸங்க கோஷ்டிகளில் வியந்துவருவதால், பரமாசார்ய பக்தாளுக்கு அறிவிக்க வேண்டுமென்று இவ்வார்யதர்மம் ஏற்றுக்கொள்கிறது. பிரகிருதத்தில் உபஸம்ஹாரம் செய்து மற்றொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுத விரும்புகிறேன்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி

# ஓர் விக்ஞாபனம்.

அகில பாரதீய வர்ணாச்ரமதர்ம ஸ்வாராஜ்யசங்கத்தில் கூடியிருக்கும் ஸநாதனதர்மாபிமானிகளின் ஸமீபத்தில் வணக்கமாய் விக்ஞாபனம் செய்துகொள்ளுவதாவது— பூஜிக்கத்தகும் பெரியோர்களே! தங்களுடைய கைங்கரியத்தில் இந்த எனது சரீரத்தையீடுபடுத்தச் சக்தியற்றவனாயிருக்கிறேன் என்ற கவலையினாலேயே வருந்துகின்ற நான் தங்களோடுகலந்துகொண்ட புண்யவசத்தால் என் மனது இந்தக் கார்யத்தில் பிரவிர்த்திக்கிறது. ஒன்றுமறியாத யான் நமது பாரதபூமியின் உயிர்நிலைபோன்ற தர்மத்தையறிவிக்கத் தலையிட்டது ஸாஹஸமே. நம் பாரதமாதாவுக்கும் பாரதமக்களுக்கும் உயிர்நிலையான தர்மத்திற்கு பிரளயகாலமாகவும், பயங்கரமாகவும் இக்காலமேற்பட்டதுபோல் இதற்குமுன் ஒரு ஸமயமும் நேர்ந்ததில்லையென்ற விஷயத்தை மேற்றிசையார் ஜாதியிற்பிறந்தும் நம் பாரதமாதாவிடமும் பிராமணாதிகளின் ஸநாதனதர்மத்தினிடமும் பக்தியுள்ள உட்ராப் என்றவர் பன்னி

ரண்டு வருஷங்களுக்குமுந்தியே தெரிவித்திருக்கிறரென்பது தங் களுக்கெல்லாம் தெரிந்ததே. ராஜகீய மஹாஸபைகளிலும் மற்று முள்ளஸமாஜங்களிலும் அவ்வப்பொழுது நிகழும் நீதிமார்க்கக்கி ளர்ச்சியால்நம் தேசம் மிகக்கஷ்டமான நிலைமையில்நின்று மிகவும் பரிதாபப்படுவதாகக்காணப்படுகிறது அன்றியும்நம்மவர்களுள்ளே சிலர்மேற்றிசையார்ஸபைகளில் சேர்ந்துகொண்டுதர்மமார்க்கத்தை முழுமையும் நாசமடையும்படி செய்ய ஜயக்கொடி யெழுப்புகிறுர் கள். பிராம்மணுதிகளின் ஸநாதனதர்மமே ஸர்வசிரேஷ்டமென் பதிற் சிறிதும் ஸந்தேகமில்லை. இந்த ஜகத்து இன்றைக்கு நேற் றைக்கு புதிதாக சில மனிதர்கள் சேர்ந்து செய்ததில்லை. அநாதி யாக பரமேச்வரனிடத்திலிருந்து உண்டானதாகப் பிரமாணநூல் கள் போதிக்கின்றன. அவராலேயே ரக்ஷிக்கப்படுகின்றது. அவ ரிடமே பிரளயத்திலொடுங்கி நிற்கின்றது என்றும் பிராமணிகர் அறிந்ததே. அந்த உலகத்தாரின் க்ஷேமத்திற்காகவே பரமே சுவரன் தர்மமார்க்கத்தையும் மஹரிஷிகள்மூலமாகப் பிரவிருத்தி செய்வித்திருக்கிறுர். அதனுலேயே இப்பாரதபூமி கர்மபூமியென வும், மற்றவை போகபூமியெனவும் மஹரிஷிகளின் வசனங்களில் வெளிப்படை. அத்தகைய தர்மதத்துவத்தைத் தீர்மானிக்கத் தார்மிகஸபைக்கே அதிகாரமெனப் பொருத்தமுடையதாக ஏற் படுத்தியிருக்கிறுர்கள், அப்படியிருந்தும் அந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் ஸ்வதந்திரங்களாகக் கிளம்பின பற்பல ஸமாஜங்களாலும் அவைகளின் சில சம்பிரதாயங்களாலும், அநேகவிதமாகப் பிளக் கப்பட்டன. விதேசியர்களின் பாஷாப்படிப்பினுலும் ஆர்யபாஷை யழிந்துவிட்டது. புதிதுபுதிதாகச் சட்டங்கள் கிளப்பப்படுகின் றன. இவ்வளவிருந்தும் நம் பாரதநாட்டில் இப்பொழுதும் ஆர்ய ஜாதி பிழைத்திருக்கிறதென்பது ஆச்சரியத்திலுமாச்சரியம். இதற் குக் காரணம் நமது ஸநாதனதர்மமே. இப்பொழுதோ பெரிய பிரவாஹமொன்று கிளம்பியிருக்கின்றதே! அதில் தர்மத்தை பிரா ணுகக்கொண்ட ஆர்யஜாதிப்பெரியோர் பிழைப்பார்களா என்ற கேள்விக்கிடமாயிருக்கிறது இச்சமயம். அந்தோ! இப்பொழுது பெரும்பாலும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மேற்றிசையாரின் மோஹவலையில் சிக்கிக்கொண்டு, மேற்றிசையாரின் ஸாமர்த்தியம் சிறிதுமில்லாவிடினும் ஸாமர்த்தியமுள்ளவர்கள்போல் அபின யித்து ஸ்வதர்மத்தையுமிழந்து படுகுழியில் தாங்கள்விழுந்ததோடு

நில்லாமல் மற்றவர்களையும் மேற்றிசையாரின் சபைகளில் புகுவித்துப் பள்ளத்தில் தள்ளிவிடப் பார்க்கிறார்கள். இவ்வளவாலும் அவர்களுக்கு நீதிஸ்தலங்களில் யாதொரு ஸ்வாதந்திரியமும் கிடைத்துவிடவில்லை. இந்த நிலைமையிலிருக்கும்பொழுதே இவ்விதம் செய்வார்களானால் ஒரு ஸமயம் ஸ்வாதந்திரியம் கிடைத்துவிட்டால் பரிசுத்தமானவிடங்களையெல்லாம் அசுத்தமாக்கிக் கெடுத்துவிடுவார்களென்பதில் ஆக்ஷேபமேயில்லை. இதைப்பற்றித் தான்முதலில் மிகக்கவலைப்படவேண்டியிருக்கிறது. ஸ்வதர்மத்தை விட்டு வழுவாமல் வர்ணாசிரமதர்மத்தையே முக்கியமாகக்கொண்டு ஆர்யதர்ம ரக்ஷகர்களாக தங்களை நினைத்துக்கொண்டிருப்பவர்களோவெனில், சோம்பேரிகளாகவும் போகத்திலும், விளையாட்டிலும் ஈடுபட்டவர்களாகவும் செய்யவேண்டியதின்னதென்றும் தெரிந்துகொள்ளாமலுமிருக்கிறார்கள். மேற்றிசையார்களோ கார்யத்தில் கண்ணாயிருந்து இவர்களைக்கெடுத்துவிடப்பார்க்கிறார்கள். எந்த மஹானுபாவர்கள், பூர்வபுருஷர்களின் பெருமைபொருந்திய தர்மபரிஷத்தையும் வர்ணாசிரமதர்மத்தையும் இரக்ஷிக்க விரும்புகிறார்களோ! அவர்கள் தங்களது சோம்பலையும், விளையாட்டுப் பேச்சு விஷயபோகம் முதலிய துர்குணங்களையும் சீக்கிரத்தில் விட்டுத்துலைத்து பிறர் சமாஜத்தில் சேரவேண்டுமென்று ஆசை கொள்ளாமல் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவாவது பிரயத்தினம் எடுத்துக்கொள்ள வேண்டும். தங்களோடொத்து வருபவர்களோடு சேர்ந்து மஹிமைபொருந்திய தமது தர்மத்தையும், அதைப்பாலிக்கும் திறமைவாய்ந்த பரிஷத்தையும் எங்கும் ஸ்தாபனம் செய்து விஷயங்களிலேயே மூழ்கியிருக்கின்ற போக பூமி வாசிகளுக்கு கொஞ்சமாவது ஞானக்கண்திறக்கும்படியான உபாயத்தைத் தேடவேண்டும். ஓ மஹானுபாவர்களே! பன்னிரண்டு வருஷங்களுக்கு முந்தியே திவ்யதிருஷ்டியுள்ள உட்ராப் என்பார் எந்த சங்கைகொண்டாரோ! அதுவேதற்போது எவ்விதத்திலும் பலித்துவிட்டது. முன்காலத்திலிருந்த ஸமாஜங்களெல்லாம் திடமான அஸ்திவாரத்துடன் கூடியதாயிருந்து இப்பொழுதோவெனில் காற்றிலடித்துக்கொண்டு போகும் கற்பூரக்கட்டி போல அந்த ஸமாஜக்கட்டெல்லாம் காணாமலே ஆய்விட்டது. அக்காலத்தில் எல்லா ஸமாஜத்தாரும் பிராம்மணர்களிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். எவனுக்கும் தர்மசாஸ்திரத்தை மீறி நடக்க

வேண்டுமென்ற பிடிவாதமில்லாமலிருந்தது. சுகமாக் வாழுவதற் கிடமான நம் நாட்டிலேயே ஒற்றுமையுடனிருந்து சுகமாய் நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொருவனும் ஸ்வதந் திரனுயிருக்கவேணுமென்ற எண்ணம் ஒருவனுக்காவது இல்லை. இப்பொழுதோவெனில் அதற்கெல்லாம் விபரீதமான அவஸ்தை நேர்ந்துவிட்டது. பெரிய குடும்பங்களிற் பிறந்த பிள்ளைகளுக் கும் பிதிருபக்தி இல்லாமல் போய்விட்டது. பிள்ளைகளுக்குள் பரஸ்பரம் விரோதமுண்டாய்விட்டது.ஆனந்தத்திற்கிடமானவிடம் துக்கத்திற்கிடமாய்விட்டது. நம்முன்னோர்களது கல்லிழைத்த கனகமாளிகைகளும் வேட்டை நாய் விசிக்குமிடமாய்விட்டன. எவ்வாறு முடியுமோ தெரியவில்லை. இந்த விஷயத்தில் சிலர் புத்தி ரர்களை தூஷிக்கிறார்கள். சிலர் தகப்பனை நிந்திக்கிறார்கள். சிலர் சத்துருக்களின் தோஷமிது என்கிறார்கள். இவ்விதமாகக் கஷ்ட நிலைமை நம்மவர்க்கு நேர்ந்திருக்கையில் வேறு சிலர் பிராமணர்க ளிடமே குற்றம் சுமத்துகிறார்கள். சிலர் க்ஷத்திரிய வைசியாதிக ளிடங்களில் பிசகிருப்பதாகக் கூறுகிறார்கள். சிலர் விதேசியர்க ளின் பிசகென்கிறார்கள். எவ்விதமாயினும் ஆகுக. முன் கூறிய வாறு தத்தளித்துக்கொண்டிருக்கும் நம் தர்ம நாடு இரட்சிக்கப் படாவிடில் நம் சங்கமும் நசித்திடும். நம் பெரியோரிப்பொழுதும் உபேக்ஷையாயிருப்பார்களானல் மற்றவர்களும் அவர்கள் வழி யையே பின்பற்றுவார்கள். குடும்பத்தலைவனை தகப்பன் நசிக் கும் நிலையிலிருக்கும் தன் குடும்பத்தில் தன்னலோ பூர்வீகர்களா லோ, மற்றவர்களாலோ ஏற்பட்ட தோஷங்களை விலக்கி ஜாக்கி தையாய் ஒழுங்காயிருப்பானல் அந்தக் குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுள் சிலபோாவது தகப்பன் வழியை அனுசரித்து தன் குடும்பத்தையும் இரட்சித்து புனிதமாக்குவார்கள். அதுபோல் பெருங்சங்கடத்தால் கலக்கமுற்ற இச்சமயத்தில் தகப்பன்போல் தலைவனக விளங்கும் பிராமணர்கள் தாங்கள் செய்யவேண்டிய தைச் செய்துகொண்டு ஒழுங்காயிருப்பார்களானல் மற்றவர்கள் ஒழுங்காயிருப்பார்கள், அவர்கள் செய்யவேண்டியதைச் சிறிது சொல்லுகிறேன்.

1. எல்லா பிராமணர்களும்இராஜ்யாதிகாரமோஹத்தையும், விஷயாசையையும் விளையாட்டுப் பேச்சையும் விட்டு ஸ்வதர்மத்தி லேயே இருக்கவேண்டும். பணம் சம்பாதிப்பதையே பெரிதாக

நினைத்த பிராமணர்கள். தாங்கள் சம்பாதித்ததில் பன்னிரண்டில் ஒரு பாகத்தையாவது ஸநாதன தர்மாகூஷணக்காகச்சிலவிடவேண்டும். உண்மையானப் பிராமணனால் தன் சரீர போஷணத்திற் கதிகமானதைக் கிரஹிக்கவும் கூடாது. அதை வைத்துப் பாது காக்கவும் கூடாது. இப்படியில்லாவிடில் யாவரும் அவமானப் படுத்தக் கூடிய நிலையிலிருக்கட்டும்.

2. மடாதிபதிகளான தர்மாசார்யாள் மஹந்துக்கள் முதலியவர்களின் முன்னிலையில் ஒரு விக்ஞாபனம் செய்துகொள்ள வேண்டும். அதாவது அவர்களுக்கு தீர்த்தகாணிக்கையாக சிஷ்ய ஜனங்களால் ஸமர்ப்பணம் செய்யப்பட்டதெல்லாம் ஸநாதனதர்மப் பிரசாரத்திற்காகவும், ஸபாஸ்தாபனத்திற்காகவும், கொடுக்க வேண்டியதாக ஆக்ஞை செய்யவேண்டும். தர்மப்பிரசாரத்திலும் ஸபாஸ்தாபனத்திலும் அவர்களே தலைவர்களாயிருக்கவேண்டும். இல்லாவிடில் அவர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் ஸம்பந்தம்விலகிப் போகும்.

3. ஆசார்யாளும், தியாகிகளும் பிராமணர்களும் எல்லோரும் சேர்ந்து காசீக்ஷேத்திரத்தில் பொது ஸபையை ஸ்தாபிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு நகரங்களிலும் கிளை ஸபைகளை ஸ்தாபிக்க வேண்டும்.

5. சிலர் ஸபைகளை ஸ்தாபனம் செய்துகொண்டே போக வேண்டும். சிலர் பொதுச் சிலவுக்காகப் பொருள்தேடவேண்டும்.

6. ஸம்ஸ்கிருதபாஷையிலும், பலவித தேசபாஷைகளிலும் இங்கிலீஷிலும் வாரப்பத்திரிகையைப் பிரசுரப்படுத்த வேண்டும்.

7. ஸநாதனதர்மத்திற்கு விரோதமாய் வாதிப்பவர்களும் ஓயாமல் கலகம் செய்பவர்களும் பிரசுரிக்கும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும், ஆங்காங்குப் பிரசங்க மேடைகளில் அவர்கள் சொல்லும் வார்த்தைகளையும் நமது பொது சபையும் கிளை ஸபைகளும் சேர்ந்து கண்டனம்செய்த தீர்மானங்களை சீக்கிரமாய் வெளியிடுவதே அந்தப் பத்திரிகைகளுக்கு முக்கியநோக்கமாய் இருக்க வேண்டும். யுக்திகள் நிறைந்த நல்ல வாதங்களையும் வெளியிட வேண்டும்.

இங்ஙனம்,

ஸ்ரீ காளி சங்கரதேவசர்மா, காசீ.

# பிராம்மணமஹாசபை சேங்காலிபுரம்.

மேற்படி சபையின் ஆதரவில் நடந்ததான பஜனைகோஷ்டியில் 30-1-31 வெள்ளிக்கிழமை பிரம்மஸ்ரீ ராமாயணம் அப்பாசாமி சாஸ்திரிகள் அவர்களால் "பக்தி" என்கிற விஷயத்தைப்பற்றி மிகவும் நன்றாக உபன்யசிக்கப்பட்டு எல்லா பக்த ஜனங்களின் மனதையும் பரவசமாகச் செய்யப்பட்டது. பிறகு பிரம்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர் அவர்கள் நமது ஹிந்து மதத்திற்கு "விவாஹம்" என்பது ஒரு மூலகாரணமென்றும், அது சாஸ்திரப்படி ஸித்தித்தால்தான் நமது 'ஹிந்துமதம்'நிலைநிற்குமென்றும் தனது பர்த்தா எப்படியிருந்தபோதிலும் சிறுவயதிலுள்ள கன்னிகைகளுக்குஅவனே நல்ல அழகுள்ளவனென்றும் நம்மை எப்பொழுதும் ரக்ஷிக்கக் கடமைப்பட்டவனென்றும் வரும் ஐக்யபாவத்தோடு இருக்கவேண்டும் என்றும் அதினால் ஸ்திரீகளுக்கு வேண்டிய லஜ்ஜை நாணம் முதலிய சகலகுணங்களும் விருத்தியடையுமென்றும் நமது சாஸ்திரங்களிலுள்ள தத்துவத்தை உபன்யசித்தார். அங்கு வந்திருந்த பக்தஜனங்கள் யாவரும் சாரதாசட்டம் மதத்திற்கு விரோதமெனவும்சாரதாசட்டம்தங்களைப்பாதிக்கக்கூடாதெனவும் கவர்ன்மெண்டாரால் யாதொரு தடையில்லாமல் விவாஹங்கள் நடைபெற வேணுடுமெனவும் பிரார்த்தித்துக் கொண்டார்கள். பிறகு பிரம்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர் அவர்கள் வேதங்களில்கர்மானுஷ்டானமும் செய்து பகவன்நாமாக்களை உச்சரிக்க வேண்டும் என்று சொல்லிய விஷயங்களை மிகவும் பக்தியுண்டாகுபடி ப்ரவசனம் செய்தார். சில வாரங்களில் ஹிந்துமதஸ்தாபனத்தைப்பற்றி பல உபன்யாஸங்கள் நடத்தப்படும்.

K. S. வேங்கட்டராமன்.

# வாரவிருத்தாந்தம்.

தகாதசெயல்:— தூத்துக்குடி, சேர்மாதேவி, நடுப்பாலப்பார் கோவிலுக்கு சொந்தமான சித்ரவேலை நிறைந்த 4-விக்ரஹங்கள் சென்னை அரசாங்கப் பொருட்காக்ஷிக்கு ரூ.504-க்கு விற்கப்பட்டதாம். எக்காரணம்பற்றியானாலும் எந்த விக்ரஹமானாலும் பூஜிப்பவரிடம் கொடுப்பது, அல்லது பூஜை செய்வது நியாயமேயன்றி பணத்திற்கு விற்பது பாதகச் செயல்.

இனியாவது சும்மாயிருப்பாரோ:- இந்தியா சட்டசபைமெம்ப ரான கோர் என்பார் இந்தியர்களை வெள்ளையாக்க பகீரதப்ரயத் தனம் செய்கிறார். ஒவ்வொரு கல்யாணத்தையும் ரிஜிஸ்தர் செய்ய வேண்டும். ஒரு மனைவிக்கு மேல் விவாஹங்கூடாது. எந்த ஜாதி யிலும் விவாஹம் செய்யலாம். இதை மீறின் சிக்ஷை என்றோர் சட்டத்தைக் கொண்டுவந்தார், சட்டமெம்பர் அழகாக பதில் கூறி இதைக்கண்டித்தார். எதிர்ப்பு பலக்கவே இதை வாபீஸ் வாங்கி பின் புறமாக ஓட ஆரம்பித்தார். சபையோர் இவரை நிறுத்தி வைத்து ஓரேஅடியாக ஓட்டுகளால் இதைக்கொன்றனர். போதும் அவமானம், தன் கக்ஷியினரே கைவிட்டனர். இனியே னும் சும்மாயிருப்பாரோ ?

கடைமையைச்செய்தார்:- ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியார் சொன்னபடிஇவ்வசந்தர்ப்பச்சட்டத்தை எதிர்த்துப்போராடினர் இவர் போன்ற பலரை அனுப்பவேண்டியது நம் கடமை.

ஆசார: பரமோ தர்ம:- சிஷ்டர்களது சாஸ்திராவிருத்தமான செய்கைஆசாரம். சாஸ்திரம்தெரியுமோ தெரியாதோ ஸம்ப்ரதாய மென நம்மவர் ஸதாசாரத்தைப்பின் பற்றுவது வழக்கம். ஸ்காட் லாந்தில் புதுவருஷத்தில் முதலில் பெண்களோ கறுத்த மனித ரோ வீட்டில் நுழைவது ஸம்ப்ரதாயமாம். அரசாங்க ஆலயத்தில் முதல் மந்திரி கருப்பு மனிதனை ஆள்வார் மஹாராஜாவைஉள்ளே விட்டாராம். நம்மக்கள் ஆசாரத்தை வெறுக்கின்றனர். என்னே காலம் !

ஸாஹஸம்:— மருமகளிடம் கோபங்கொண்ட ஓர் மாமியார் அவளுக்கு விஷமிட்டதாக திருச்சியில் ஓர் கேஸ் நடக்கிறது. ஸத் ஸஹவாஸமும் நல்லவுபதேசமும் இல்லாததால் அந்தணரில் இத் தகைய ஸாஹஸம் செய்வாருளர்.

வீண்சண்டை:- சென்ற மாதம் உத்திராதிமடம் ஸ்வாமிகள் (மத்வமதஸ்தர்) அத்வைதம் அவைதிகமென அறை கூவி சண் டைக்கு அழைத்ததாகக் கண்டோம். யானை கண்ட குருடர் போல் மதச்சண்டையிடுவோர் அடையும் பயன்யாது ? நமது பர மாசார்யாள் எதிர்க்காத பூர்வபக்ஷமும் சொல்லாதஸித்தாந்தமும், இனி எவராலும் சொல்லமுடியாது. எல்லோரும் சேர்ந்து இழந்து வரும் நமது ஸனாதனதர்மத்தை ப்ரசாரம் செய்வதைவிட்டு நமக் குள்ளே போர் புரிவது அழகல்ல. இருகக்ஷியினரும் பிடிவாதம்

செய்வார். பிறருக்கு செவிகொடுப்பது கஷ்டம். காமக்ரோதங்களை அடக்கவந்த வேதாந்த நூல்களைக்கொண்டு மார்தட்டி சண்டைக்கு அழைப்பது நன்றன்று.

தாழி உடைந்தது:— 6ஃ காலை பண்டித மோதிலால் நேரு ஆவி துறந்தார். இவர் வைதிகாசாரத்தை வெறுத்தவரெனினும் தியாகமூர்த்தி. பாரதநாடு ஸ்வாராஜ்யம்பெற குடும்பத்துடனுழைத்தவர். இச்சமயத்தில் அவர் இல்லாதது வெண்ணைவரும் சமயத்தில் தாழி உடைந்தது போலாம்.

பூகம்பம்.- நியூஸிலாண்டில் பூகம்பம்தோன்றி 1000-மனிதர் இறந்தனர், பல பட்டணங்கள் அழிந்தன. தர்மம் சரியாக காக்கப்படின் இதுபோல் தோன்ரு.

நேருவின் நேர்மை:— ஆங்கிலக்கல்விமோஹத்தால் ஆசாரத்தைத் துறந்தார். மேனாட்டு சேர்க்கையால் நம் நாட்டு வழக்க ஒழுக்கங்களை விட்டார். பூர்வஜன்ம புண்யவிசேஷத்தாலும் தியாகத்தாலும் அந்தியகாலத்தில் எதை நினைத்தால் நற்கதியைப்பெறலாமோ அதை (காயத்திரியை) நினைத்தார். சொன்னார். இது காலம் தானதை ஜபிக்காததற்காக வருந்தினர். நவநாகரீகத்தில்முழுகினேர் கண்விழிக்குமோ ?

சாஸ்திரம் பொய்யாமோ:- விவாஹத்தில் மூன்று தலைமுறையாதுவ நன்குதெரிந்த வாலக்ஷணம் பொருந்தியவனுக்கே கன்யகாதானம்செய்யவேண்டுமென்றுசாஸ்திரவிதி. ஆங்கிலப்படிப்பைத்யானத்தினாலும், தனமோஹத்தாலும், குல கோத்திரம் விசாரியாது விவாஹம் செய்வோர்பாடு கஷ்டமே. வடமரென்றெண்ணி சிவத்விஜரு (குருக்களு)க்கு தன்சஹோதரர் பெண்ணைக் கொடுத்து ஏமாந்தவக்கில் தேவக்கோட்டை கிருஷ்ணய்யர் மோசம் செய்ததாக வியாஜ்யம்தொடுத்திருக்கிறார். எதிரியை சிக்ஷித்தாலும் விவாஹம் என்றாவது? முன் ஜாக்ரதையாயிருக்கச் சொல்லுகிறது சாஸ்திரம். அது வீணுமோ ?

தேசாபிமானிகள் கவனிப்பாரோ: - ஜீவகாருண்யமில்லாமல் சென்னையில் போலீஸார் தொண்டர்களை அடிப்பதைக் கண்டிக்க ஓர் சபை கூடிற்று. அச்சமயம் ஹில்ட்டாவுட் என்ற ஆங்கிலமாது இச்செயலைக் கண்டித்து இந்த சமயம் மேனாட்டு வழக்க ஒழுக்குகளையும் பஹிஷ்காரம் செய்யுங்கள் எனசொன்னார். மேடையேறி வீரம் பேசும் தலைவர்கள் தலையே மேனாட்டு நாகரீகத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. செல்வத்தைக் களைந்து ஆஸ்திகத்தை அகற்றி உடலை ஒடுக்கும் பல பல மேனாட்டு துராசாரங்களை தேசீயம் பேசுவோர்கள் களைவரோ ?

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.